Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, FEBRUARY 06 2025

வியாழக்கிழமை, 06 பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 153 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

# ‘கட்’ செய்யப்பட்டாலும் நேரடி ஒளிபரப்பில் வெளியாகி விட்டது

அர்ச்சுனா எம்.பி. யூடியுப்பர்களில் ஒருவர் .அவர் இங்கு பேசும் விடயங்கள் ஹன்சாட்டிலிருந்து நீக்கப்பட்டாலும் அவை நேரடி ஒளிபரப்பில் வெளியாகி விட்டது என சபை முதல்வம் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) அர்ச்சுனா எம்.பி. சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் ஏற்பட்ட சர்ச்சையின் போது, தனது கருத்தை முன்வைக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சபை முதல்வர் மேலும் கூறுகையில்,

அர்ச்சுனா எம்.பி. எழுத்து மூலம் சபாநாயகருக்கு பிரச்சினையை முன்வைத்திருப்பார். அதனை அவர் வாசிக்காது வேறு விடயத்திற்காக அதனை பயன்படுத்துவாராக இருந்தால் சபாநாயகர் நேரத்தை முகாமைத்துவம் செய்ய வேண்டும். அவருக்கு உரையாற்ற இடமளிக்காத பிரச்சினை எதிர்க்கட்சியுடையது. அவரின் இந்த நிலைக்கு இதுவும் காரணம். அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்காக சிறப்புரிமை பிரச்சினையை பயன்படுத்துகின்றார்.

அவரின் உரையை ஹன்சாட்டில் இருந்து நீக்குவதாக நீங்கள் கூறினாலும் அவரின் உரை நேரடி ஒளிபரப்பில் வெளியாகி விட்டது.

தொடர்ச்சி P2

# லசந்த படுகொலை; பிரதான சந்தேக நபர்களை விடுவிக்க பரிந்துரை



‘த சண்டேலீடர்’ ஆசிரியர் பாராளுமன்ற விவகாரங்கள் உட்பட எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பிலான முக்கிய கலந்துரையாடலொன்று எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் புதன்கிழமை(05) பாராளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# “வெளிநாட்டு உதவிகள் தொடர்பில் விசாரிக்கவும்”

இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிநாட்டு உதவிகளை எவ்வாறு கையாண்டுள்ளது என்பதை ஆராய்வதற்கு தகுந்த விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது,

இலங்கை மாத்திரம் அண்மைய ஆண்டுகளில் USAID இலிருந்து மில்லியன் கணக்கான டொலர்களை ரொக்கமாகவும் மானியங்களாகும் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கிலும் ஏராளமான திட்டங்களுக்கு நிதியளித்துள்ள USAID மேற்கத்திய ஊடகங்களுடன் சர்ச்சையில் சிக்கியுள்ளதாகவும் அவர் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதாபிமான உதவி என்ற போர்வையில், ஏனைய நாடுகளின் பிரச்சினைகளையும் உறுதியற்ற

தொடர்ச்சி P2

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தில் திருத்தம்



முந்தைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தில் பல புதிய திருத்தங்களைக் கொண்டுவர தற்போதைய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக சட்டமா அதிபர், உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட விதம் சட்டத்துக்கு முரணானது என தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட நான்கு அடிப்படை உரிமைகள் மனுக்கள் புதன்கிழமை(05) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

குறித்த மனுக்களை டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா உட்பட பல தரப்பினர் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# அர்ச்சுனாவுக்கு ஹன்சாட் ‘கட்’

## சபாநாயகரை நோக்கி விரல் நீட்டி விமர்சித்ததாகவும் குற்றச்சாட்டு

பாராளுமன்ற உறுப்பினரான அர்ச்சுனா ராமநாதன் முன்வைத்த சிறப்புரிமை மீறல் கடிதத்தில் உள்ள விடயங்களைத் தவிர அவர் இங்கு உரையாற்றிய ஏனைய அனைத்து விடயங்களும் ஹன்சாட்டிலிருந்து நீக்கப்படும் என சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன அறிவித்துள்ளார்.

பாராளுமன்றம் புதன்கிழமை (05) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதனையடுத்து ஜனாதிபதியின் அறிவிப்பு, குழுக்களின் அறிவிப்புக்களை சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.அதன்பின்னர் சுயேச்சைக்குழு 17 இந்த யாழ். மாவட்ட எம்.பியான அர்ச்சுனா ராமநாதன் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைக்க அனுமதியளித்துள்ளார்.

இதனையடுத்து, 21ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் இருந்து தான் கொழும்பு வரும் போது அநுராதபுரம் பகுதியில் தனது வாகனத்தை போக்குவரத்து பொலிஸார் நிறுத்திய போது ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து அர்ச்சுனா எம்.பி. உரையாற்றியுள்ளார்.

முதலில் அர்ச்சுனா எம்.பி தமிழில் உரையாற்றிய நிலையில் அதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் நீங்கள் உங்களின் சிறப்புரிமை பிரச்சினை தொடர்பான கடிதத்தை ஆங்கிலத்தில் சமர்ப்பித்துள்ளதால் ஆங்கிலத்திலேயே உரையாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வேளையில் தான் சிங்களத்தில் உரையாற்றவா? என்று அர்ச்சுனா எம்.பி சபாநாயகரிடம் கேட்டார். இதற்கு பதிலளித்த சபாநாயகர் முடியாது. நீங்கள் ஆங்கிலத்தில் கடிதத்தை முன்வைத்துள்ளதால் அந்த மொழியிலேயே பேச முடியும் என்றார்.

இதனை தொடர்ந்து அர்ச்சுனா எம்.பி ஆங்கிலத்தில் உரையாற்றிய நிலையில், இடையில் குறுக்கிட்ட சபாநாயகர் நீங்கள் வழங்கிய கடிதத்தில் உள்ள விடயங்களை மட்டுமே வாசிக்கவும் என்று அறிவுறுத்தினார். எனினும் அர்ச்சுனா தொடர்ந்தும் வேறு விடயங்களை முன்வைத்துடன் சபாநாயகரை நோக்கி விரல் நீட்டியும் விமர்சிக்கும் வகையிலும் அவர் உரையாற்றியுள்ளார்

இதன்போது அர்ச்சுனா எம்.பியின் உரை தொடர்பில் அறிவித்தலை விடுத்த சபாநாயகர், அர்ச்சுனா ராமநாதன் எம்.பியினால் முன்வைக்கப்பட்ட கூறப்பட்ட சிறப்புரிமை கடிதத்தில் இல்லாத விடயங்கள் அனைத்தும் ஹன்சாட்டில் இருந்து நீக்கப்படும் என அறிவித்துள்ளார்.

அத்துடன், எம்.பி.யாகிய நீங்கள் போக்குவரத்து விதியை மீறியுள்ளமை தொடர்பிலும், உங்களுக்கு எதிராக போக்குவரத்து சட்டத்தின்படி நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் பொலிஸாரால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்டம் அனைவருக்கும் சமமானது. எம்.பியாக இருந்தாலும் சரி அமைச்சராக இருந்தாலும் சரி எவருக்கும் இந்த சட்டத்திற்கு மேலாக செல்ல முடியாது. இதனால் தயவு செய்து அந்த சட்டத்திற்கமைய நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்ச்சி P2

# தேங்காய் இறக்குமதிக்கு அனுமதி



தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக சுமார் 200 மில்லியன் தேங்காய்களுக்குச் சமமான கொள்ளவைக் கொண்டுள்ள தேங்காய் சொட்டுக்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2




# கடவுசீட்டுக்களை வழங்க புதிய நடைமுறை

குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தை 24 மணித்தியாலங்களும் இயங்கச் செய்து, நாளொன்று 4,000 கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டுக்களை விநியோகிப்பதற்காக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் கடமையில் ஈடுபடுத்துவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2



# நீர் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை

நீர் கட்டணத்தை 10 முதல் 30 சதவீதம் வரை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டண குறைப்போடு ஒப்பிட்டு, நீர் கட்டணங்களையும் குறைப்பதில் கவனம் செலுத்தப்படுவதாகவும், இது குறித்து ஆராய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# நீதிமன்றில் ஆஜரானார் அமைச்சர் விஜித

அமைச்சர் விஜித ஹேரத் கொழும்பு மேல் நீதிமன்றில் புதன்கிழமை (05) ஆஜராகியுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் முன்னாள் தலைவரான சந்திரவன்ச பத்திராஜாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இலஞ்ச வழக்கு தொடர்பில் சாட்சியமளிப்பதற்காகவே அமைச்சர் விஜித ஹேரத் மேல் நீதிமன்றில் ஆஜராகியுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதவான் ஆர்.எஸ்.எஸ். சமுதித்த முன்னிலையில் இந்த வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

நீதிமன்றில் ஆஜரான பின்னர் அமைச்சர் விஜித ஹேரத் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

# நெல்லுக்கு நிர்ணய விலை



நெல் கொள்வனவுக்கு வழங்கப்படும் விலைகளை அரசாங்கம் நெல் சந்தைப்படுத்தல் சபை மூலம் புதன்கிழமை(05) அறிவித்துள்ளது.

அதற்கமைய, நாடு நெல் ஒரு கிலோ கிராம் நாடு நெல் 120 ரூபாவுக்கும், சம்பா நெல் கிலோ கிராம் 125 ரூபாவுக்கும், கீரி சம்பா நெல் கிலோ கிராம் 132 ரூபாவுக்கும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் என விவசாய அமைச்சர் கே.டி. லால் காந்த மற்றும் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்னே தெரிவித்துள்ளனர்.

தற்போது இடம்பெற்றுவரும் செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

# இராணுவத்தின் பதவிநிலை பிரதானி நியமனம்



இலங்கை இராணுவத்தின் புதிய பதவிநிலை பிரதானியாக மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க இராணுவத் தளபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நியமனம் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 'கட்' செய்யப்பட்டாலும் நேரடி ஒளிபரப்பில் வெளியாகி விட்டது

அத்துடன், அவர் யூடியுப்பர்களில் ஒருவர். தனக்கு பாராளுமன்றத்தில் உரையாற்ற நேரம் கிடைக்காத காரணத்தினாலேயே அவர் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துகின்றார். அவரின் சட்டப்படியான பிரச்சினையை நீங்கள் தீர்த்துக்கொள்ளுங்கள். ஆனால் இங்கே இருப்பது வேறு பிரச்சினை என்றார்.

இவ்வேளையில், எழுந்த எதிர்க்கட்சி பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக ,இன்று அவர் வேறு பிரச்சினை தொடர்பிலேயே சிறப் புரிமை பிரச்சினையை முன்வைத்துள்ளார்.

ஆனால் இதற்கு முன்னர் அவர் சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பி உரை நேரம் தொடர்பில் கூறியிருந்தார். எவ்வாறாயினும் அவர் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் என்பதனால் எமது நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும். நாங்கள் எதிர்க்கட்சியின் மற்றைய கட்சிகளுடன் கொடுக்கல் வாங்கல்களை செய்யும் முறையொன்று உள்ளது. அந்த முறைக்கு அவர் இணக்கம் என்றால் அவருக்கு நேரத்தை வழங்க முடியுமென்று அன்றே கூறியுள்ளோம் என்றார்.

# லசந்த படுகொலை; பிரதான சந்தேக நபர்களை விடுவிக்க பரிந்துரை

பாராளுமன்றத்திலும் வெளியிலும் கூட்டாக இணைந்து செயற்படுவது தொடர்பாக எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வது இக்கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாகும்.

இதன் மூலம் பலமான பாராளுமன்ற நடவடிக்கைகளை கொண்டமைந்த பாராளுமன்றத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றும், அரசாங்கத்தின் சிறந்த தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பது போலவே, நாட்டு மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பை வெளியிட்டு மக்கள் பக்கம் நாம் முன்நிற்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு தெரிவித்தார்.

பாராளுமன்ற குழுக்களில் கவனம் செலுத்தி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இங்கு சகல கட்சித் தலைவர்களும் தமது கருத்துக்களை எடுத்துரைத்து சுட்டிக்காட்டினர்.

கடந்த ஜனவரி 29ஆம் திகதியும் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கூடி இதேபோன்ற கலந்துரையாடலொன்றை நடத்தியதோடு, இன்று நடைபெற்ற கலந்துரையாடலும் இதன் தொடர்ச்சியாகும்.

இக்கலந்துரையாடலில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்களான கயந்த கருணாதிலக்க (எதிர்க்கட்சியின் பிரதம கொறடா), ஜே.சி. அலவதுவல (எதிர்க்கட்சியின் பிரதி அமைப்பாளர்), அஜித் பி. பெரேரா (எதிர்க்கட்சியின் பிரதி அமைப்பாளர்), ரிஷாத் பதியுதீன், நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, ஜீவன் தொண்டமான், சிவஞானம் ஸ்ரீதரன், பி. சத்தியலிங்கம், அமிர்தநாதன் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரவூப் ஹக்கீம், நிசாம் காரியப்பர், வீ.எஸ். இராதாகிருஷ்ணன், அனுராத ஜயரத்ன, டி.வீ.சானக மற்றும் காதர் மஸ்தான் முதலானோர் கலந்துகொண்டனர்.

கொலை தொடர்பாக கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் சந்தேக நபர்களாகப் பெயரிடப்பட்டிருந்த இராணுவப் புலனாய்வு அதிகாரி மற்றும் முன்னாள் டிஐஜி உட்பட மூன்று நபர்களை விடுவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுத் துறைக்கு (சிஐடி) தனது சட்ட ஆலோசனையை வழங்கியுள்ளார்.



ஜனவரி 27, 2025 அன்று சி.ஐ.டி. தலைவருக்கு சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவினால் அனுப்பப்பட்ட ஆலோசனைக் கடிதத்தில், நீதவான் விசாரணை வழக்கு எண் B/92/2009 தொடர்பாக, இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இணைக்கப்பட்ட முன்னாள் சர்ஜென்ட் பிரேம் ஆனந்த உடலகம,கல்கிஸ்ஸை பொலிஸின் முன்னாள் குற்றப்பிரிவு அதிகாரி, சப்-இன்ஸ்பெக்டர் திஸ்ஸ சிறி சுகதபால மற்றும் ஓய்வுபெற்ற மூத்த டிஐஜி பிரசன்ன நாணயக்கார ஆகிய மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக மேலும் சட்ட நடவடிக்கை எடுக்க அரசு தரப்பு விரும்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பான ஆதாரங்களை மறைத்ததாகக் கூறி மூன்று சந்தேக நபர்களும் ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். தற்போது அவர்கள் பிணையில் வெளியே உள்ளனர்.

சட்டமா அதிபரின் கடிதத்தின் பிரதி கல்கிஸ்ஸை நீதவான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த உண்மைகளை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் 14 நாட்களுக்குள் முன்னேற்றத்தை தெரிவிக்குமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுத் துறைக்கு மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

கூடுதலாக, 2009ஆம் ஆண்டு ரிவிர செய்தித்தாளின் முன்னாள் ஆசிரியர் உபாலி தென்னகோன் மீதான தாக்குதல் தொடர்பாக உடலகம ஒரு சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# அர்ச்சுனாவுக்கு ஹன்சாட் 'கட்'

## சபாநாயகரை நோக்கி விரல் நீட்டி விமர்சித்ததாகவும் குற்றச்சாட்டு

இதேவேளை, நீங்கள் பாராளுமன்ற நடவடிக்கைகளில் பங்கெடுப்பதற்காக வசதிகளை வழங்குமாறும் நாங்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளோம். இதற்கு அப்பால் சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

இதனை தொடர்ந்து மீண்டும் உரையாற்ற அர்ச்சுனா எம்.பி முயன்ற நிலையில், நீங்கள் கடிதத்திற்கு அப்பாலான விடயங்களை கூறுகின்றீர்கள் என்று கூறி அதற்கு மேல் அவருக்கு அனுமதி வழங்க சபாநாயகர் மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்க்கது.

# தேங்காய் இறக்குமதிக்கு அனுமதி

நாட்டில் தெங்கு உற்பத்தி போதுமானளவு இன்மையால் உள்நாட்டு நுகர்வுக்காக சந்தையில் ஏற்பட்டுள்ள தேங்காய் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக தற்காலிக உள்நாட்டுத் தேங்காய் உள்நாட்டு தெங்கு உற்பத்தியை அதிகரிப்பதற்க இயலுமாகும் வகையில், தேங்காயை மூலப்பொருட்களாகக் கொண்டு இயங்குகின்ற தொழிற்றுறைகளுக்குத் தேவையான தேங்காய்ச்சில் மற்றும் தேங்காய்ச்சில் சார்ந்த ஏனைய மூலப்பொருட்கள் தற்போது நடைமுறையிலுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கு இணங்கி துரிதமாக இறக்கமதி செய்யக்கூடிய இயலுமையை குறித்த தரப்பினர்களுடன் கலந்துரையாடி அதற்கான பொறிமுறையைத் தயாரிக்குமாறு ஜனவரி 27ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டது.

அதற்கமைய, விவசாயத் திணைக்களம், தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, தாவரத் தொற்றுக்காப்பு சேவை மற்றும் இலங்கை தரநிர்ணயக் கட்டளைகள் நிறுவன் இணைந்து குளிரூட்டப்பட்ட தேங்காய் சொட்டு மற்றும் உலர் தேங்காய் சொட்டு துண்டுகள் (கொப்பரா அல்லாத), தேங்காய் பால், தேங்காய்ப் பால்மா மற்றும் பதனிடப்பட்ட தேங்காய்ப்பூ போன்றவற்றின் இறக்குமதிக்கு ஏற்புடைய வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழிகாட்டியைக் கடைப்பிடித்து, 200 மில்லியன் தேங்காய்களுக்குச் சமமான கொள்ளவைக் கொண்டுள்ள தேங்காய் சொட்டு சார்ந்த உற்பத்திகளையும் மற்றும் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான உலர் தேங்காய் சொட்டு துண்டுகளையும் (கொப்பரா அல்லாத) இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரும் இணைந்து சமர்ப்பிப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கடவுசீட்டுக்களை வழங்க புதிய நடைமுறை

நாட்டில் தற்போது நிலவி வரும் கடவுச்சீட்டுப் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் குழுவின் 'பி' வகைக் கடவுச்சீட்டுக்களை சமகால விநியோகத்தர்களுக்கு வழங்குவதற்கான செயன்முறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, தற்போதுள்ள கடவுச்சீட்டு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தாமதத்தை நீக்குவதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் நடவடிக்கைகளை தொடர்ந்து 24 மணித்தியாலயங்கள் மேற்கொள்வதன் மூலம் நாளொன்றுக்கு 4,000 கடவுச்சீட்டுக்கள் வீதம் வெளியிடுவதற்கான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.



# நீர் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை

இந்த குழுவின் அறிக்கை அடுத்த சில நாட்களுக்குள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும், பின்னர் அது தொடர்பான முன்மொழிவுகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# நீதிமன்றில் ஆஜரானார் அமைச்சர் விஜித

நான் கடந்த 2015ஆம் ஆண்டில் சந்திரவன்ச பத்திராஜாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்கியிருந்தேன்.

பொதுமக்களின் சொத்துக்களை தவறாக பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கத்தில் நான் இந்த முறைப்பாட்டை வழங்கியிருந்தேன்.

எனவே, இது தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் என தெரிவித்துள்ளார்.

இதனை கருத்தில் கொண்ட கொழும்பு மேலதிக நீதவான் ஆர்.எஸ்.எஸ் சமுதித்த, எதிர்வரும் ஜூன் மாதம் 04ஆம் திகதி இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# "வெளிநாட்டு உதவிகள் தொடர்பில் விசாரிக்கவும்"

தன்மையையும் உருவாக்க இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனத்தினர் தங்கள் மானியங்கள் மற்றும் உதவிகளை எவ்வாறு பயன்படுத்தினார்கள்? என்பது பற்றிய தெளிவான பதிவு எதுவும் இல்லையெனவும் USAID இன் கீழ் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விசாரணை நடத்தி, விரிவான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்வதாக நாமல் ராஜபக்ஷ அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய சலுகைகளைப் பெற்றுக்கொண்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி வழங்குவதற்கான விதிமுறைகள் பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்தாலும், அவை இன்னும் செயற்படுத்தப்படவில்லை. எனவே வெளிப்படைத் தன்மையைப் பேண இந்த விதிமுறைகளைக் கொண்டுவருமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதாக நாமல் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவத்தின் பதவிநிலை பிரதானி நியமனம்

இராணுவத்தின் 45ஆவது பிரதி பதவிநிலை பிரதானி பணியாற்றிய மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க, கஜபா படைப்பிரிவில் இணைந்து பணியாற்றிய ஒரு புகழ்பெற்ற இராணுவ அதிகாரி ஆவார்.

மாத்தளையில் பிறந்த இவர், மாத்தளை விஜயா வித்தியாலயம் மற்றும் கண்டி தர்மராஜா வித்தியாலயத்தின் புகழ்பெற்ற பழைய மாணவராவார். மேலும் 1989 ஆம் ஆண்டு இராணுவத்தில் ஒரு கெடட் அதிகாரியாக இணைந்தமை குறிப்பிடத்தக்கது.

# அர்ச்சுனாவுக்கு எதிரான குற்றப்பத்திரம் தாக்கல் செய்ய உத்தரவு

யாழ். மாவட்ட எம்.பியான இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தை, எதிர்வரும் மே மாதம 28ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு அநுராதபுரம் நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் பிரதேச போக்குவரத்து பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் செல்லுபடியற்ற வாகன சாரதிப் பத்திரத்துடன் வாகனத்தை செலுத்தியமை ஆகிய போக்குவரத்து சட்டங்களை மீறிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக அர்ச்சுனாவுக்கெதிராக இந்த குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அண்மையில், யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரம் ஊடாக கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அரச்சுனாவின் காரை, அநுராதபுரம் ரம்பேவ பகுதியில் வைத்து, அவரது சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்களை பொலிஸார் பரிசோதனை செய்ய முற்பட்டபோது பொலிஸார் கடமைகளுக்கு இடையூறு விளைவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, போக்குவரத்து பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாக அர்ச்சுனா எம்.பி. மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்த தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் அநுராதபுரம் நீதிமன்ற நீதவான் நாலக சஞ்சீவ ஜயசூரிய முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதவானால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜரானார் என்பது குறிப்பிடத்தக்கது.









# வருடாந்த தேர் திருவிழா

பொகவந்தலாவ ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா புதன்கிழமை (05) அன்று வெகு விமர்சையாக நடைபெற்றுள்ளது.

இதன்போது, சுவாமி சிலைகளை ஏந்திய மூன்று தேர்கள் பொகவந்தலாவ நகரில் ஊர்வலம் வந்தததுடன், இத் தேர் விழாவில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஊடகங்களில் வெளியாகும் தகவல்கள்

# ஏன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதில்லை

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பாராளுமத்தில் ஏன் சமர்ப்பிக்கவில்லை என சபாநாயகரிடம் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஊடகங்களில் கூட வெளியாகும் தகவல்கள் ஏன் பாராளுமன்றத்தில் முன்னரே முன்வைக்கப்படுவதில்லை என்பதில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளார்.



பாராளுமன்றத்தில் புதன்கிழமை(05) விசேட கூற்று ஒன்றை முன்வைத்தே இக்கேள்வியை எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான விசேட ஏற்பாடுகள் சட்டமூலங்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் மற்றும் பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க சபாநாயகர் தவறிவிட்டார். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் அண்மையில் கிடைக்கப்பெற்றுள்ளன என்ற தகவல்களும், தேர்தல் நடக்கும் கால அட்டவணை தொடர்பிலான விடயங்கள் கூட ஊடகங்களில் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும், இந்த தீர்மானம் பாராளுமன்றத்தில் கட்டாயம் அறிவிக்க வேண்டும் என்பதுடன் முழுமையான தீர்ப்பு குறித்த நாளுக்கான ஹன்சாட் அதிகார அறிக்கையில் வெளியிடப்பட வேண்டும். ஆனால் இத்தீர்ப்பு இது வரை அறிவிக்கப்படவில்லை.

உயர் நீதிமன்றம் சில சட்டமூலங்களை ஆராய்ந்து பரிசீலித்த பின்னர், சம்பந்தப்பட்ட தீர்ப்பை சபாநாயகருக்கு அனுப்பி வைக்கும். அதன் பின்னர், அடுத்து வரும் பாராளுமன்ற அமர்வின் முதலாம் நாளன்று சம்பந்தப்பட்ட அத்தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்தில் கட்டாயம் அறிவிக்க வேண்டும்.

இந்த தீர்ப்பினை பாராளுமன்றத்தில் தெரிவிக்காமையினால் சபாநாயகராகிய உங்களினதும், பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன. இந்தத் தீர்ப்பை ஏன் சபையில் அறிவிக்கவில்லை என்று கேட்கிறோம்? ஊடகங்களில் கூட வெளியாகும் தகவல்கள் ஏன் பாராளுமன்றத்தில் முன்னமே முன்வைக்கப்படுவதில்லை என்பதில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஒழுங்கு முறையில் காணப்படும் பிரச்சினை தொடர்பிலே நாம் இங்கு கேள்வி எழுப்புகிறோம். இந்த செயன்முறை சபாநாயகர் ஊடாக நிறைவுற வேண்டிய அறிவிப்புக்கு முன்னர் நாட்டிற்கு வெளியாகியமை தொடர்பிலயே இங்கு பிரச்சினை காணப்படுகின்றன. அது எவ்வாறு அறிவிக்கப்பட முடியும்? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.




# அர்ச்சுனாவுக்கு தலையில் பிரச்சினை



அர்ச்சுனா எம்.பியின் தலையில் பிரச்சினை இருக்கின்றது என்றும், அவரை மனநல மருத்துவரிடம் அனுப்புமாறும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை சிறப்புரிமை பிரச்சினை முன்வைத்து அர்ச்சுனா எம்.பி உரையாற்றும் போது அவரால் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள் தொடர்பில் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே தயாசிறி ஜயசேகர எம்.பி இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

தயாசிறி ஜயசேகர அதன்போது மேலும் கூறுகையில்,

இவரின் (அர்ச்சுனா எம்.பியின்) செயற்பாடுகள் தொடர்பில் எங்களுக்கு பிரச்சினைகள் உள்ளன. இவர் உங்களை நோக்கி (சபாநாயகரை) வெட்கம் என்று கூறுகின்றார். அத்துடன் சிறுபான்மைக்கு எதிரான விடயம் என்றும் கூறுகின்றார். இங்கே சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடுகள் கிடையாது. இங்கே சிறுபான்மை என்று நாங்கள் எவரையும் கதைத்ததில்லை. இதனை செய்யவிட வேண்டாம். இவருக்கு தலையில் பிரச்சினை உள்ளது. மனநலம் பாதிக்கப்பட்டவர். இவரை மனநல மருத்துவரிடம் அனுப்புங்கள் என்றார்.

# இரு சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது


பாறுக் ஷிஹான்

இரு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மலையடிக்கிராமம் 01 பகுதியில் கடந்த பெப்ரவரி 03 ஆம் திகதி வீடொன்று உடைக்கப்பட்டு தொலைபேசி உட்பட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டிற்கமைய சம்மாந்துறை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது, வீரமுனை மற்றும் மலையடிக் கிராமம் பகுதிகளைச் சேர்ந்த இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் வசம் இருந்து இரண்டு தொலைபேசிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், கடந்த ஜனவரி 26ஆம் திகதி மையவாடி பகுதியில் வயதான பெண் ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்து நகை மற்றும் கையடக்க தொலைபேசிகளை கொள்ளையடித்த சம்பவத்துடன் குறித்த இரு சந்தேக நபர்களும் தொடர்புள்ளமை பொலிஸ் விசாரணையில் வெளியாகியுள்ளது.



அத்துடன் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் அறிந்த, பாதிக்கப்பட்ட வயதான பெண் செவ்வாய்க்கிழமை (04) அன்று சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு வந்து தனது வீட்டில் கடந்த ஜனவரி 26 ஆம் திகதி இரவு நகை மற்றும் கையடக்க தொலைபேசிகள் திருடிச் செல்லப்பட்டிருந்ததாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேற் குறித்த இரு சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் போது, பாண்டிருப்பு 02 பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் வசம் இருந்த கொள்ளையடித்த நகைகளையும் மீட்டுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சண்டையை விலக்கச் சென்றவர் பொல்லால் தாக்கப்பட்டு மரணம்

எம்.எம்.அஹமட் அனாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புனாணை - ஓமடியாமடு கிராமத்தில் செவ்வாய்க்கிழமை(04) இரவு பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓமடியாமடு கிராமத்தைச் சேர்ந்த செல்லையா சுந்தரலிங்கம் (வயது -63) எனும் ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சண்டையாக மாறியுள்ள நிலையில், அதனை விலக்கச்சென்ற நிலையில் பொல்லால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

சண்டையிட்ட சகோதரர்களின் இத்தாக்குதலே இக்கொலைக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

# காலி சிறைச்சாலைக்குள் வீசப்பட்ட பொதி

காலி சிறைச்சாலைக்குள் செவ்வாய்க்கிழமை(04) அன்று பொதி ஒன்று வீசப்பட்டதாகச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பொதியைச் சோதனையிட்டுப் பார்த்த போது, அதிலிருந்து கத்தி, புகையிலைகள் மற்றும் லைட்டர் என்பன மீட்கப் பட்டுள்ளதுடன், இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக காலி சிறைச்சாலையின் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.



# 28 கிலோ கேரளா கஞ்சா பொதிகள் மீட்பு

எஸ்.ஆர்.லெம்பேட்

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவு குளப் பகுதியில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகள் செவ்வாய்க்கிழமை(4) காலை அடம்பன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார்- அடம்பன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே 42 லட்சம் பெறுமதியுடைய, 28 கிலோ எடை கொண்ட கேரள கஞ்சாவை 13 பொதிகளாக வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவித்த அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மீட்கப்படும் பழைய கொலைகள் தீர்வின்றியே மூடப்படுமா?

நாட்டில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட நபர்களில் ஊடகவிலயலாளர் லசந்த விக்ரமதுங்க, ரகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதின், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை போன்றன ராஜபக்ஷர்கள் தவிர்ந்த பிறிதொரு தரப்பு ஆட்சிபீடம் ஏறிய போது பரவலாகப் பேசப்பட்டன. கிடப்பில் இடப்பட்டிருந்த விசாரணைகள் மீண்டும் முடக்கிவிடப்பட்டு, பரவலாகப் பேசப்பட்டன. தற்போதைய திசைகாட்டி அரசாங்கத்தினாலும் இந்த கொலைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றன.

அதுபோன்றே, உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலும் தற்போதைய அரசாங்கத்தினால் பல விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில், ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய முக்கியமான ஆவணங்களை மறைத்தவர்கள் அல்லது சிதைத்தவர்கள், கொலைக்கு உடந்தையாக இருந்தவர்கள் என சந்தேகிக்கத்தில், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பேரை விடுவிக்குமாறு சட்டமா அதிபரினால், குற்றப்புலனாய்வு விசாரணை திணைக்களத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளமை தொடர்பில் பரவலாகப் பேசப்படுவதுடன், சமூக ஆர்வலர்கள், சிவில் செயற்பாட்டாளர்களின் எதிர்ப்பையும் எதிர்கொண்டுள்ளது.

லசந்தவின் கொலை தொடர்பான முறையான விசாரணைகள் 2015ஆம் ஆண்டில் ஆட்சிபீடமேறிய நல்லாட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதாவது, கொலை நடைபெற்று சுமார் ஆறு ஆண்டுகள் கழிந்த பின்னரே முறையான ஆழமான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து குறித்த மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தற்போது குறித்த மூன்று சந்தேக நபர்களுக்கும் எதிரான சட்ட ரீதியாக எவ்விதமான நடவடிக்கைகளும் தொடரப்படமாட்டாது, அவர்களை விடுவிக்குமாறு அறிவுறுத்தியுள்ளமை சட்டமா அதிபர் ஏதேனும் அரசியல் பின்னணியில் இவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளாரா? அல்லது ஏதேனும் அரசியல் தலைமையைப் பாதுகாக்கும் வகையில் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளாரா? என்பது போன்ற சந்தேகங்கள் சமூக ஆர்வலர்கள் மத்தியில் எழுந்துள்ள நிலையில், தற்போதைய சட்டமா அதிபர் நியமனம் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் வழங்கப்பட்டதாக அமைந்துள்ளது.

லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பான விசாரணைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான பொறுப்பு புதிய குழுவினரிடம் ஜனவரி 15ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, ஜனவரி 27ஆம் திகதி சட்டமா அதிபரினால் மேற்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. குறித்த விசாரணைக் குழுவின் விசாரணைகளில் ஏதேனும் புதிய விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதனால் இந்த தீர்மானத்தை சட்ட மா அதிபர் மேற்கொண்டாரா என்ற ஒரு சந்தேகமும் இல்லாமல் இல்லை.

எவ்வாறாயினும், ராஜபக்சர்கள் தவிர்த்து இதர தரப்பினர் நாட்டில் ஆட்சி செய்யும் போது, ராஜபக்சர்கள் ஆட்சி புரிந்த காலப்பகுதியில் நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் தொடர்பில் ஆரம்பத்தில் ஆரவாரமாக விசாரணைகள் ஆரம்பமாகி, காலப்போக்கில் அவை சத்தமின்றி அடங்கிப்போவதைக் கடந்த காலங்களில் கண்ணுற்ற நிலையில், இந்த விசாரணைகளும் அவ்வாறே மூடப்பட்டுவிடுமா?



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கோழைகளுக்கு ஏது வாழ்வு? வீரர்கள் மரிப்பதில்லை. தினம் தினம் வீழ்ந்தும் உக்கிரமாக எழுந்திடுவார்கள். பயந்து வாழ்பவனுக்கு ரோசம் கிடையாது. நியாயங்களைத் தட்டிக் கேட்கத் துணிச்சல் வேண்டும்.

துணிந்தவனுக்குத் தொய்வும் இல்லை, தோல்வியும் கிடையாது. எனது நாடு; எனது இனம் என்பதற்காகப் போராடுபவருக்குப் பின்னால் செல்பவர்களைவிட, டாம்பீகமாகவும் தவறான முறையிலும் செல்வம் தேடுபவர்களுக்குப் பின்னால் திரிகின்றவர்கள்தான் அதிகம்.

நியாயத்தைப் பேசுபவர்களை வாழத்தெரியாதவர்கள் என்கின்றனர். அடிமை வாழ்வே சகஜமாகி விட்டது. மனிதன், செயலாற்றுவதற்கே பிறந்தவன்; செத்துப்போவதற்கல்ல! மக்களை மறந்தவன், வாழும் உரிமையை இழக்கிறான்.

விலங்குகள், பறவைகள் கூட, மனிதர்களை விட சுதந்திரமாக வாழுகின்றன. ஆனால், நாம் அக்கம்பக்கம் பார்த்துப் பேச வேண்டியுள்ளது. எவராவது 'பற்றவைத்து' விடுவாரோ என அஞ்சவேண்டியுள்ளது.

உண்மைகளைத் துணிச்சலுடன் பேசுக! பொய்யர்கள்தான் மறைந்து நின்று பயத்துடன் பேசுகின்றார்கள். சுதந்திரம் நமக்கு எப்போது?

நன்றி –பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஏமாற்றத்தை எதிர்பார்ப்பாக்க முயலும் 'திசைகாட்டி'

முருகானந்தம் தவம்

**'மாற்றம்' என்ற கோஷத்துடன் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிய அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் 'திசைகாட்டி' அரசு பதவியேற்று 3 மாதங்களாகிவிட்ட நிலையில், நாட்டில் பெரியளவான மாற்றங்கள் ஏற்படுத்தப்படாத, நாட்டுக்கோ மக்களுக்கோ புதிய திசைகள் இதுவரையில் காட்டப்படாத நிலையில், அனுரகுமார அரசிடம் மாற்றத்தை எதிர்பார்த்த மக்கள் ஏமாற்றத்தை அடைந்து வருவதனால் சற்று சுதாரித்துக் கொண்ட அரசு ராஜபக்ஷக்களை இலக்கு வைத்து சில நடவடிக்கைகளை எடுத்து மக்களின் ஏமாற்றத்தை எதிர்பார்ப்பாக்க முயற்சிக்கின்றது.**

நாம் ஆட்சிக்கு வந்தால் ஊழல், மோசடி செய்த மற்றும் குற்றங்கள் புரிந்த அரசியல்வாதிகள் சிறை செல்வார்கள், உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று சூளுரைத்து மக்களை உசுப்பேற்றி, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியக்கைப் பற்றியபோதும், இத்தனை நாட்களும் அனுரகுமார அரசினால் எதனையும் செய்ய முடியவில்லை. அதனால் தமது உறுதிமொழிகள், சூளுரைகள் உசுப்பேற்றல்கள் தொடர்பில் அடக்கி வாசித்து வந்த அனுரகுமார அரசு, தற்போது 'மஹிந்தவின் அரச மாளிகை' 'ராஜபக்ஷக்கள் கைது' என்ற படங்களை மக்களுக்குக் காட்டி மக்களைச் சிறிது காலத்துக்கு குஷிப்படுத்த தொடங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள் அரச சொகுசு மாளிகையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற அனுரகுமார அரசின் அறிவிப்பால் முன்னாள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு 'செக்' வைக்கப்பட்டது. இதுராஜபக்ஷக்களிடையில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதுடன், பொதுஜன பெரமுனவினரை கொதிப்படையவும் வைத்தது. முன்னாள் ஜனாதிபதிகள் அரச மாளிகைகளிலிருந்து வெளியேற வேண்டும் என்ற அறிவிப்புடன் ராஜபக்ஷக்களை இலக்கு வைத்து அனுரகுமார அரசு காட்டத் தொடங்கியுள்ள இந்தப் படம், மக்களைக் கொஞ்சம் கவர்ந்துள்ள நிலையில், அதன் இறுதிக்கட்டம் 'அனுதாப அலை' என்றவகையில், ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக மாறி விடக்கூடிய நிலைமையையும் மறுத்து விட முடியாதளவுக்கு அண்மைய சம்பவங்கள் காணப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு கொழும்பு -05 பகுதியில் வீடு ஒன்று ஒதுக்கப்பட்டது. இந்த வீட்டின் நடைமுறை சந்தை பெறுமதி 2598.5 மில்லியன் ரூபாய். நடைமுறை மாத வாடகை கட்டணம் 1,275,000 ரூபா இந்த வீட்டிலிருந்து கோட்டபாய ராஜபக்ஷ வெளியேறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கொழும்பு-07 பெஜ்ஜட் பகுதியில் வழங்கப்பட்டிருந்த வீடு 3,132 மில்லியன் ரூபா பெறுமதியானது. இதன் நடைமுறை சந்தை மாத வாடகை கட்டணம் 29 இலட்சம் ரூபாய். இந்த வீட்டிலிருந்து ரணில் விக்ரமசிங்கவும் வெளியேறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியாரான ஹேமா பிரேமதாச கொழும்பு-07 இல் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான வீட்டில் வசித்தார். தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு-07 பகுதியில் 1005.5 மில்லியன் ரூபா பெறுமதியான வீடு வழங்கப்பட்டது. இவர் இன்றும் இந்த வீட்டில் தான் வசிக்கிறார். அந்த வீட்டின் நடைமுறை சந்தை மாத வாடகை 9 இலட்சம் ரூபாய். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் பௌத்தாலோக்க மாவத்தை வீடு, சுமார் 1 ஏக்கர் 13.8 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 3,128 மில்லியன் ரூபா பெறுமதியானது. 46 இலட்சம் ரூபா மாத வாடகை பெறுமதியானது. எனவே, இவர்கள் இந்த வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என அனுரகுமார அரசு அறிவித்தது.

இவ்வாறான நிலையில்தான் 'மாற்றம்' என்ற கோஷத்துடன் ஆட்சியை கைப்பற்றிய அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு செலவு குறைப்பு என்ற பெயரில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள், வரப்பிரசாதங்களில் கை வைத்துள்ளது. மக்களின் வரிப் பணத்தை வீண் செலவுகளிலிருந்து பாதுகாக்கவே இந்த நடவடிக்கை என அனுரகுமார அரசு காரணம் கற்பிக்கும் நிலையில், இது மஹிந்த ராஜபக்ஷவை இலக்கு வைத்து அனுர அரசு நடத்தும் அரசியல் பழிவாங்கல் என ராஜபக்ஷ தரப்பினரும் அவர்களது கட்சியினரும் குற்றம் சுமத்துகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதிகள் அரச மாளிகைகளிலிருந்து வெளியேற வேண்டும் என அனுரகுமார அரசு விடுத்துள்ள அறிவிப்புக்கு நாட்டு மக்களிடையிலும் அரசியல்வாதிகளிடையிலும் ஆதரவும் எதிர்ப்பும் காணப்படுகின்றன. நாட்டுக்குச் சேவை செய்த முன்னாள் ஜனாதிபதிகளுக்கான கௌரவத்தை அரசு தொடர்ந்தும் வழங்க வேண்டுமென ஒருதரப்பினரும் மக்களின் வரிப் பணத்தை இவர்களின் ஆடம்பரங்களுக்குச் செலவிடக் கூடாதென இன்னொரு தரப்பினரும் வாதிட்டு வருகின்றனர்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதிகளை அரச மாளிகைகளிலிருந்து அனுரகுமார அரசு நினைத்தவாறு வெளியேற்ற முடியாது. அதில் சட்டச் சிக்கல்கள் உள்ளன. முன்னாள் ஜனாதிபதிகள் தாம் விரும்பினால் மட்டுமே அரசமாளிகைகளிருந்து வெளியேறலாம் எனவும் சட்ட நிபுணர்கள், அரசியல் ஆய்வாளர்கள் வெளிப்படுத்துகின்றனர். இதனால் தான் அரச மாளிகையிலிருந்து வெளியேறுங்கள் என அனுரகுமார அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் வேண்டுகோள் மட்டுமே விடுத்துள்ளதுடன், அவர்களாக வெளியேறும்வகையில் முன்னாள் ஜனாதிபதிகளைக் குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவை கடுமையாக விமர்சனம் செய்யும் பிரசார தந்திரத்தையும் முன்னெடுத்து வருகின்றது.

ஆனால் அனுரகுமார அரசின் இந்த பிரசாரங்களுக்கு ,சேறு பூசும் வேலைகளுக்கு "நான் மஹிந்த ராஜபக்ஷ" என ஒற்றை வரியில் பதிலளித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளதுடன், குறிப்பிட்ட வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என அனுரகுமார அரசு எனக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவித்தால் அந்த வீட்டிலிருந்து அடுத்த நிமிடமே வெளியேறத் தயார் எனவும் அறிவித்துள்ளார். ஏனெனில், அவ்வாறு அனுரகுமார அரசினால் உத்தியோகப்பூர்வமாக அறிவிக்க அரசியலமைப்பில் இடமில்லை என்பது மஹிந்த ராஜபக்ஷவுக்கு தெரியும்.

இவ்வாறான நிலையில்தான் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வரும் முன்னாள் கடற்படை அதிகாரியுமான யோஷித்த ராஜபக்ஷவை அதிரடியாகக் கைது செய்து ராஜபக்ஷ குடும்பத்திற்கும் பொதுஜன பெரமுனவிற்கும் குடைச்சல் கொடுக்க அனுரகுமார அரசு ஆரம்பித்துள்ளது. இரத்மலானை, சிறிமல் பிரதேசத்தில் அமைந்துள்ள 34 மில்லியன் ரூபா மதிப்புள்ள வீடு மற்றும் காணியை வாங்கியது தொடர்பாக இடம்பெற்ற முறைகேடுகள் என்ற குற்றச்சாட்டில் பணமோசடி சட்டத்தின் கீழ் யோஷித்த ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு, தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அடுத்துவரும் நாட்களில் மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வரும் முன்னாள் அமைச்சரும் தற்போதைய பொதுஜன பெரமுன எம்.பியுமான நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்படலாம் என்ற தகவல்களும் அனுரகுமார அரசினால் கசிய விடப்படுகின்றன. இவ்வாறான நிலையில், இதனை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நாமல் ராஜபக்ஷவை கைது செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான சட்டத்தரணி மனோஜ் கமகேயும் தெரிவித்துள்ளார். இதனை உறுதிப்படுத்தும் விதமாகவே நாமல் ராஜபக்ஷவிற்கு எதிராகச் சட்ட மா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளார். இலங்கையில் ரக்பி அபிவிருத்திக்காக இந்திய கிரிஷ் ரியல் எஸ்டேட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 70 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் இந்த குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அனுரகுமார அரசின் இவ்வாறான நடவடிக்கைகளைப் பார்க்கும்போது 'மாற்றம்' என்ற கோஷத்துடன் ஆட்சியைக் கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி அரசும் பொருளாதார நெருக்கடிகள்,மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கள், இனப்பிரச்சினை என எந்தப்பிரச்சினைகளுக்கும் எந்த தீர்வுகளுமின்றி , எந்த மாற்றமுமின்றி நாட்களைக் கடத்துவதுடன் கடந்த அரசுகளைப் போன்றே அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டு தமது அரசை ஸ்திரப்படுத்தவே முயற்சிப்பதாகவே தெரிகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் ராஜபக்ஷக்களுக்கு என ஒரு வரலாறு உண்டு. யுத்தத்தை முடித்து வைத்தவர்கள், புலிகளைத் தோற்கடித்தவர்கள் என சிங்களவர்களானால் தேசிய வீரர்களாகப் போற்றிப் புகழப்பட்டவர்கள். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள், கோட்டபாய ராஜபக்ஷ அரசின் சில தவறான நடவடிக்கைகளினால் மக்கள் ஒரு மாற்றத்தை எதிர்பார்த்தாலும் ராஜபக்ஷக்கள் அனுரகுமார அரசினால் திட்டமிட்டுப் பழிவாங்கப்படுவார்களாக இருந்தால் ராஜபக்ஷக்களின் கௌரவம் சீரழிக்கப்படுமானால், அது ராஜபக்ஷ அரசு மீதான மக்களின் வெறுப்பாக மாறி ராஜபக்ஷக்கள் மீதான அனுதாப அலையாக வீசினாலும் ஆச்சரியப்பட முடியாது. ஏனெனில், 'மாற்றம்' ஒன்றே மாறாதது.

## கடிதங்கள்

### "உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்"

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக அனைத்து நீர் தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மவுசாகலை நீர் தேக்கத்தின் நீர்மட்டம் கொள்ளளவை விட 13 அடி குறைந்து, 107 அடி நீர் மட்டுமே உள்ளது. காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட 10 அடி குறைந்து, 149 அடியில் உள்ளது. விமலா சுரேந்திர நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட 10 அடி குறைந்து, 83 அடி மட்டுமே நீர் கையிருப்பில் உள்ளது. கென்யோன் நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 8 அடி குறைந்து, 51 மட்டும் உள்ளது என நீர் மின் உற்பத்தி நிலையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக நீர் தேக்கங்களின் கரையோர பகுதியில் பற்றைகளுக்கும் வன பகுதிகளுக்கும் விசமிகள் தீ வைப்பதும் இந்த நிலைக்கு காரணம் என தெரிவித்துள்ளார்.


இவ்வாறு தீ வைப்பவர்களை அடையாளம் கண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- செ.தி.பெருமாள்



## சங்ககால இலக்கியங்களில்
# தொல்லியல் ஆய்வுகளும் அறிவியல் வெளிப்பாடுகளும்

ல.மயூரன் BA,MA,
திருக்கடலூர்,
திருகோணமலை.



தமிழர்களின் வரலாற்றையும் பெருமையினையும் பறைசாற்றும் வகையில், பல்வேறு விதமான இலக்கியப் படைப்புக்களும், தொல்லியல் ஆய்வுகளும் வெளிப்பட்டு கொண்டு இருக்கின்றன. அவை அனைத்தும் தமிழ் மரபினை மேலும் சிறப்படையச் செய்வதுடன், தமிழின் தொன்மையை உலகறியச் செய்துள்ளது. தமிழ் இலக்கிய பாரம்பரியத்தில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட காலமாகவும் முதன்மைக் காலமாகவும் சங்ககாலம் காணப்படுகின்றது. இக்கால இலக்கியப் படைப்புகளில் இயற்கையின் வெளிப்பாட்டினூடாக காதலும் வீரமும் வெளிப்பட்டு நிற்கின்றது. இப்படைப்புகள் அக்கால தமிழர் மரபின் வாழ்க்கை வரலாற்றைப் பறைசாற்றி காலத்தின் கண்ணாடியாக வெளிப்படுவதோடு, அவற்றில் அறிவியல் சார்ந்த கருத்துக்களும் அதிகமாக வெளிப்பட்டுக் காணப்படுகின்றது. இக்கால இலக்கியப் படைப்புகளை வகைப்படுத்தும் போது, அவற்றுள் பதினெண் நூல்கள் உள்ளடக்கப்படுகின்றது. அப் பதினெண் மேற் கணக்கு நூல்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சங்ககால நூலில் காணப்படும் அறிவியல் கருத்துக்களை ஆராய்வதாக இக்கட்டுரை காணப்படுகின்றது.

இவ்விலக்கியங்களில் உயிரியல் சார்ந்த கருத்துக்களும், மானுடவியல் சார்ந்த கருத்துக்களும் நிலத் தோற்றம் சார்ந்த கருத்துக்களும் காணப்படுகின்றன . இவை அனைத்தும் அறிவியல் கோட்பாடுகளை அடியொற்றி காணப்பட்டுள்ளமையை இவ்விலக்கிய பாடல்களின் ஊடாக கண்டுகொள்ள முடியும். நாம் வாழும் புவியின் தோற்றம் பற்றிக் கூறும் பொழுது, பெருவெடிப்புக் கொள்கையூடாக அவை எடுத்துரைக்கப்படுகின்றது. இப் பெருவெடிப்பு கொள்கையினை (*Big bang theory* ) என்பர். உலக அறிவியல் சமுகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்ற இக்கொள்கை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவானது. இக்கொள்கை ஐன்ஸ்டீனின் பொது சார்பியல் கோட்பாடுகளையும் (*General Theory of Relativity*), பிரபஞ்சவியல் (*Cosmology*) கொள்கையையும் அடியொற்றி தோற்றம் பெற்றது. அண்டவெளியில் உள்ள பொருட்கள் வெப்பத்தின் காரணமாக விரிவடைந்து வெடித்துச் சிதறின எனவும் அவை அண்டவெளியில் பரவி அசையத் தொடங்கின எனவும் பெருவெடிப்பு கொள்கையைச் சுருக்கமாகக் கூறமுடியும். இப்பெருவெடிப்பின் போது, வெளிப்பட்ட தீக் குழம்பும், அவற்றின் காரணமாகத் தோற்றம் பெற்ற புகை மண்டலங்களும், கோள்களின் மேற்பரப்பில் தோற்றம் பெற்ற நிலத் திணிவுகளும், அதன் பின்பு கிடைக்கப்பெற்ற பெரு மழையும் அதனால் தோன்றிய சமுத்திரங்களும். நீர்ப் பரப்பில் உயிரின தோற்றங்களும் என இக்கோள் மண்டலங்களின் வளர்ச்சி நிலை கூறப்படுகின்றது. இவ்வாறு கூறப்பட்ட பௌதீக அம்சங்கள் அனைத்தும் தமிழர் மரபில் பஞ்சபூதங்கள் எனப்படுகின்றன. கடவுளாக போற்றப்படும் பஞ்ச பூதங்களை விஞ்ஞான உலகம் பௌதீக அம்சங்கள் என கூறிச்செல்கின்றது. குறிப்பாக புவியியல் பாடப்பரப்பில் இவை அனைத்தும் பௌதீகப் புவியியல் (*Physical Geography*) வகைப்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சங்ககால இலக்கியமான புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர் எனும் புலவரின் "போரும் சோறும்" எனும் பாடலில் ஐம்பூதங்கள் பற்றி பாடுகின்றார்.

"மண் திணிந்த நிலனும்,
நிலம் ஏந்திய விசும்பும்,
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்,
தீ முரணிய நீரும், என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை
போலப்..." (புறநானூறு -2)

> **உள்ளார்ந்த நோக்கும் போது, நட்சத்திரங்களின் இட அமைவுகளுடன் காலத்தின் தன்மைகளும், அவற்றின் வடிவங்களும் வெளிப்பட்டு நிற்கின்றது. இலக்கியப் படைப்புகளில் ஆர்வம் கொண்ட சங்கப் புலவர்கள் வானியல் அறிவியலிலும் சிறப்பானவர்களாகக் காணப்பட்டனர் என்பதற்கு இப்பாடல் சான்றாக அமைகின்றது**

ஐம்பெரும் பூதங்களான நிலத்தையும், வானையும், காற்றையும்,நெருப்பையும், நீரையும் உலகம் கொண்டுள்ளது என குறிப்பிடுகின்றார். அது மட்டுமன்றி, மணல் நிறைந்த நிலத்தையும் அதன் மீதுள்ள ஆகாயத்தையும், ஆகாயத்தில் தோன்றிய காற்றையும், காற்றினால் உண்டாகிய நெருப்பையும் நெருப்பினால் உண்டானது நீரும் எனவும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு புலவன் கூறும் உலகத்தின் பஞ்சபூத தோற்றம் பற்றிய கருத்து இன்றைய ஆய்வாளர்களால் கூறப்படும் பெருவெடிப்பின் பின் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் செயற்பாடுகளுக்கு ஒப்பானதாகக் காணப்படுகின்றது. பெருவெடிப்பு கொள்கையின் முடிவுகள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் அவர்கள் கூறும் கோட்பாடுகளை கி.பி மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்த சங்கப் புலவர்கள் கூறியுள்ளமை தமிழர் பாரம்பரியத்தின் அறிவியல் வெளிப்பாடுகளையும். அதன் ஆற்றலையும் கோடிட்டுக் காட்டுகின்றது.

இவ்வாறு பெருவெடிப்பின் ஊடாக தோற்றம் பெற்றதாகக் கூறப்படும் கோள் மண்டலம் அண்டவெளியில் மிதந்த வண்ணம் அசைந்து கொண்டு உள்ளது. அவை தன்னைத் தானாகச் சுற்றிக் கொண்டும், சூரியனையும் சுற்றி வருகின்றது. இவ்வாறு சூரியனைச் சுற்றி வரும் இக்கோள்கள் ஈர்ப்பு விசை(*Gravity*) காரணமாக தன்னிடம் விட்டு விலகாமல் தமக்கான வட்டப்பாதையில் பயணிக்கின்றன. அவ்வாறு பயணம் செய்யும் பாதையினை நீள் வட்டப்பாதை என்பர். இவ்வாறான வானியல் செயற்பாட்டைச் சங்க காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் அவர்களின் பாடலில் அறியலாம். தலைவனின் இயல்பைப் பற்றிக் கூறும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பின்வருமாறு கூறுகிறார்.

"செஞ்ஞா யிற்றுச் செலவும்
அஞ் ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்,
வளி திரிதரு திசையும்,
வறிது நிலைஇய காயமும்,
என்றிவை...." (புறநானூறு 30)

இப்பாடலின் ஊடாக ஞாயிற்றுக் கோள் மண்டலத்தின் பயணப்பாதைகளும், நீள்வட்ட பாதைகளின் செயற்பாடும், அஞ்ஞாயிற்றின் இயக்கமும், அவ்வியக்கம் நடைபெறுகின்ற அண்டவெளி மண்டலமும் காற்று செல்லும் திசையும், ஆகாயமின்றி நிற்கும் வானமும் அவற்றின் வழி இயங்கிக் கொண்டுள்ள காற்று மண்டலம் பற்றியும் தாமே நேரில் சென்று கண்டவர் போல் பேசும் திறன் கொண்டவர் இங்குள்ளர் என புலவன் பாடிச்செல்கின்றார். இவ்வாறு புலவர் கூறிய வார்த்தைகள் நேரடியாகத் தலைவனின் தன்னிறைவைக் கூறுவதுடன். மறைமுகமாக விண்ணியல் (*Astronomy*) சார்பாகக் கருத்துக்களையும் ஆழமாக எடுத்துரைக்கின்றது.

இப்பாடலில் உள்ள "அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்..." எனும் பாடல் வரியில் அந்த ஞாயிறு மண்டலம் சுமக்கின்ற சுமைகள் எனக் கூறுகின்றார். இப்புலவனின் கருத்தானது இன்றைய விண்ணியல் ஆய்வாளர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்ககூடிய விடயமாக உள்ளது.

வெற்றுக் கண்களால் நோக்க முடியாது தொலைநோக்கிகளைக் கொண்டு நோக்கும் இன்றைய விஞ்ஞானிகளுக்கு ஒப்பான கருத்தை தன்னுடைய பாடலில் பாடியுள்ளார். வானில் கோள்கள் மட்டுமல்ல, அவற்றினை விட பல சடப்பொருட்களை இவ் விண்மண்டலம் சுமந்து செல்கின்றது என்பதை மேற்கொண்ட அடிகளில் கூறி செல்கின்றார் சங்கப்புலவர்.

"ஆடு இயல் அழல் குட்டத்து
ஆர் இருள் அரை இரவில்
முடப் பனையத்து வேர் முதலாக்
குடைக் குளத்துக் கயம் காயப "
(புறநானூறு 229)

எனும் பாடலில் நட்சத்திரங்கள் வானில் தோன்றும் தோற்றம் பற்றிப் பேசப்படுகின்றது. இப்பாடலில் மேட ராசி பொருந்திய கார்த்திகை நாளின் முதற்காலின் கண்நிறைந்த இருள் கொண்ட பாதி இரவு பங்குனி மாதத்து நடுப் பகுதியையொட்டி செறிந்த இருள் சூழ்ந்த இரவு நேரத்தில். வளைந்த பனை போன்ற தோற்றம் உடைய அனுச மீன் கூட்டத்தினை அடுத்து வருகின்ற கோட்டை மீன் தொடங்கி கயம் எனப்படும் குளம் போல, தோற்றம் அளிக்கும் புனர்பூச மீனுக்கு முன்னதாக உள்ள திருவாதிரை மீன் வரை உள்ள பதின்மூன்று மீன்களும் வானிலே ஒளிவிட்டு திகழ (கேட்டை, அனுஷம், விசாகம், சுவாதி, சித்திரை, அஸ்தம், உத்தரம், பூரம், மகம், ஆயில்யம், பூசம், புனர்பூசம், திருவாதிரை) அப்பொழுது வானின் உச்சியிலிருந்த உத்தரம் என்னும் மீன் அவ்வுச்சியிலிருந்து மேல் திசை நோக்கிச் சாய்ந்தது. அதே நேரத்தில், அந்த உத்தர மீனிலிருந்து எட்டாவதாக வரும் மூலம் மீன் கீழ்த் திசையில் அடிவானத்தில் எழுந்தது. அந்த உத்தர மீனுக்கு முன்னதாக மேல் திசை நோக்கி நகர்ந்து சென்றவற்றுள் எட்டாவதாக அமையும் மீனாகிய மிருகசீரிடம் அடிவானில் மறையும் . அந்நேரத்தில் ஒரு விண் வீழ் கொள்ளியானது கிழக்கும் போகாமல் வடக்கும் போகாமல் வடகிழக்காகக் கடல் சூழ்ந்த உலகுக்கு விளக்கு போல, காற்றில் கிளர்ந்து எழுந்து தீர்ந்து. ஆடு போன்ற தோற்றம் உடைய மேட ராசியில் நிலைத்து நிற்கும். கார்த்திகை மீனின் முதலாம் பாதம் நோக்கி விசும்பிலிருந்து வீழ்ந்தது. அதைக் கண்டு யாமும் பிறரும் பல்வேறு இரவலரும் இது தீய அறிகுறி ஆயிற்றே என்று கவலை கொண்டோம். என இப்பாடலின் பொருள் காணப்படுகின்றது.

இப்பொருளின் தன்மையை மேலோட்டமாக நோக்குமிடத்து நட்சத்திரங்கள் அண்டவெளியில் தோன்றும் வடிவங்களையும் அவற்றின் இட அமைவுகளையும் வெளிப்படையாகக் கூறி செல்கின்றன.

ஆனால், உள்ளார்ந்த நோக்கும் போது, நட்சத்திரங்களின் இட அமைவுகளுடன் காலத்தின் தன்மைகளும், அவற்றின் வடிவங்களும் வெளிப்பட்டு நிற்கின்றது. இலக்கியப் படைப்புகளில் ஆர்வம் கொண்ட சங்கப் புலவர்கள் வானியல் அறிவியலிலும் சிறப்பானவர்களாகக் காணப்பட்டனர் என்பதற்கு இப்பாடல் சான்றாக அமைகின்றது.

# தொடருந்தாய்...





ரஜிதா அரிச்சந்திரன்,
110 புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

சமுதாய சீர்திருத்தத்தை நோக்காக கொண்டு சனசமூக நிலையத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் "உங்களை திருத்த நான் புதிதாக ஒன்றுமே சொல்லப் போவதில்லை உங்களைப்போன்ற குடும்பத்தினருக்கு வந்த பாதிப்பை மட்டும்தான் செல்லப் போகின்றேன் அதை கேட்ட பின்னும் நீங்கள் உங்களுடைய வாழ்வை காப்பாற்ற எப்மடி வாழப் போறீங்களென நீங்களே முடிவெடுங்கள்" என்று சொல்லி கதையை சொல் ஆரம்பித்தார்.

வேவி என்ன செய்யப்போறாய்? நித்தம் குடிச்சுப்போட்டு தெருவிலும் திண்ணையிலும் கிடக்கிறான். நான் முன்னமே சொன்னனான் இந்த பரதேசி எங்கட குடும்பத்திற்கு சரிப்பட்டு வராது என்று கேட்டியா? தெருவால போற வாற சனியனுகளெல்லாம் உன்ர மருமோனை அங்க கண்டேன் எனக்கேட்டு தொல்லை பண்ணுதுகள் இவனால சாறம் கழண்டு. விழுற மாதிரி இருக்கு. நான் சேர்த்து வைத்த கௌரவம் எல்லாம் காத்தில பறக்குது. நான் காட்டுக்கத்து கத்துறன் நீ என்னடி பேசாமலிருக்கிறாய்?"

"நான் என்ன செய்வது கேடு கெட்ட மனுசன் சொன்னா கேட்கிறானா?" எனச்சொல்லவும் உக்கிரமான தந்தை உதுக்கு தானே சாதிசமயம் பார்த்து கட்ட வேணு மெண்டு சொல்லுறது. இவன எங்க புடிச்சாயோ? நாசமா போனவன் இரவு வீட்டுக்கு வாறதில்லை போணும் கையுமாத்திரியுறான் கக்கூசுக்கு போகேக்கையும் போண்" என கத்திக்கெண்டிருக்க அவரின் மனைவி விமலா "என்னங்க பேசாமிருங்கோ உங்களுக்குத்தான் பிறசர் கூடப்போகுது"

ஓ இவளை பெத்தன் பார் நான் சாகத்தான் வேணும் செத்தாலும் கரைச்சலில்லை"

என கோவத்துடன் விடாமல் கத்தீட்டே இருந்தார். வேவி சுதனை பத்து வருடங்களுக்கு முன்னால் காதலிக்கேக்கே அதை கண்டுபிடித்த வேவிட தம்பி தந்தையிடம் வந்து சொல்ல வலு அமைதியாக "வேவி என்ன ?யாரவன்? என கேட்டு சுமூகமாக கேட்டு இது எங்களுக்கு ஒத்து வராது இத விட்டிடு எங்கட. சாதிக்குள்ள ஒரு பெடியனைப் பார்த்து கட்டுவம்" என்றதும் "இல்ல வாழ்ந்தா அவர் கூடத்தான் வாழுவன், இல்லாட்டி செத்துடுவன்" என அடம்பிடித்த வேவியின் அழுகையும் ஆர்ப்பாட்டமும் தந்தையை கனிய வைத்தது பிரமாண்டமாக கலியாணம் நடந்தது.

கலியாணம் நடந்த பிறகு, சுதனும் வேவியும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வீட்டில் இன்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

சுதன் ஒரு சாரதி என்றதால நாலு இடங்களுக்கும் போய்தங்கி வருவான் ஆனா நல்ல சம்பளம் சம்பளத்தை வேவியிடம் கொடுத்துவிடுவான். இல்லறம் இன்பமாகவே நடந்து வந்தது. இரண்டு வருடங்களுக்குள் மூத்த மகள் பிறந்தாள் அவளின் முப்பத்தி ஒண்டு, பிறந்தநாள் எல்லாம் சிறப்பாகவே செய்தார்கள். அடுத்த இளைய மகன் அவனுக்கும் அப்படியே சிறப்பான கொண்டாட்டங்கள் என வீடே களைகட்டியிருந்தது.

சிறப்பான இல்லறத்தில் பத்து வருடங்களை கடந்த வேவிக்கும், சுதனுக்கும் அண்மைக்காலமாக விரிசல் ஏற்பட்டது.

வேவி கதைக்கப்போனால் சுதன் விலத்திப் போவான். பிள்ளைகள் கூடவும் முந்தின மாதிரி இல்லை. தனி அறையில போனுடன் குடும்பம் நடத்தினான். பல இரவுகள் வெளியில தங்கினான். கேட்டால் வேவிக்கு அடிப்பான். வீட்டில் தங்கினால் நிறை வெறியில் தான் இருப்பான். சில வேளைகளில் காண்களிலும் தெருவிலும் கிடப்பான். இவனின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் படிப்பது குறைந்தது. பெடியனுக்கு ஒரு வித பயமும் பதகளிப்பும் ஏற்பட்டது. பள்ளிக்கூடத்தால் பெரிய ஆசுபத்திரி டொக்டரிடம் கவுண்சிலிங் அனுப்பப்பட்டுள்ளான். பெட்டையும் எதையோ பறிகுடுத்த மாதிரி திரியுது.

> **பக்கத்தூரில் இருந்த சாந்தி என்ற குடும்ப பெண்ணுக்கும் சுதனுக்கும் கள்ள உறவு ஏற்பட்டதால் தான் இவ்வளவும் என கண்டறிந்தான். அதிலும் சாதாரண தொடர்பல்ல அது மன நோய் முத்தியவர்களிருவரும் போனில் காமக்கதைகளை பேசுவதோடு உடைகளை களைந்து வீடியோவில் பார்க்கும் விசித்திர பழக்கத்தை கொண்டிருந்தார்கள்**

அதுகளுக்கு ஆனவாவில சாப்பாடும் இல்லை அவன் சம்பள காசை கொடுக்கிறதில்லை. வேலை இல்லாத தாய் எப்படி பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுப்பாள். இவனின் அட்டகாசம் பிள்ளைகளின் ர நிலை பெற்றோரின் பேச்சு எல்லாமும் வேவியை ஒரு மன நோயாளி நிலைக்கு ஆக்கிப்போட்டுது.

இவளின் நிலை கண்டு வருந்திய தாய் இவளின் குடும்பநிலையை பிரதேச செயலக பெண்கள் சிறுவர் பிரிவுக்கு அறிவிக்க இவர்களை பிரதேச செயலகத்திற்கு வரும்படி அறிவிக்க வேவி மட்டும் போனாள்.

சுதன் செல்ல மறுத்தான். உத்தியோகத்தர்கள் சுதனுக்கு போனெடுக்க "அவளுக்குத்தான் விசர் எனக்கு ஒன்றும் இல்லை" என சொல்லவும் உத்தியோகத்தரோ பிடிவாதமாக நீங்கள் வரத்தான் வேணும் என அதிகார தோரணையில் கதைக்க வேறவழியின்றி, அலுவலகத்திற்கு வந்தான் கவுண்சிலிங் உத்தியோகத்தர் கேட்ட கேள்விகளுக்கு மழுப்பலாக பதிலளித்தான். இனி குடும்ப செலவுக்கு பணம் கொடுப்பதாக உறுதியளித்து சென்றான். தொடர்ந்து மூன்று மாதங்கள் சரியாக இருந்து மறுபடியும் பிரச்சினையை தொடங்கினான்.

தொடர்ந்த இவனின் சேட்டைகளால் தன்ர தமக்கையும் பிள்ளைகளும் பாதிக்கப்படுகிறார்கள் இவன் ஏன் இப்படி செய்யுறான் என அவதானித்த வேவியிட தம்பிக்கு கண்ட சம்பவத்தால் அதிர்ச்சி தாங்க முடியவில்லை.

பக்கத்தூரில் இருந்த சாந்தி என்ற குடும்ப பெண்ணுக்கும் சுதனுக்கும் கள்ள உறவு ஏற்பட்டதால் தான் இவ்வளவும் என கண்டறிந்தான். அதிலும் சாதாரண தொடர்பல்ல அது மன நோய் முத்தியவர்களிருவரும் போனில் காமக்கதைகளை பேசுவதோடு உடைகளை களைந்து வீடியோவில் பார்க்கும் விசித்திர பழக்கத்தை கொண்டிருந்தார்கள். இதறிந்த வேவியிட தம்பி சாந்தியின் கணவனுக்கு இதை தெரிவிக்க அவனோ சரி போடா அவள என்ர சொல்ல. கேட்க மாட்டாள் நீயும் வேணுமண்டா அவளிட்ட போடா எனக்கூற ஆத்திரமடைந்தவன் "என்னடா மனிசிக்காரியை விட்டுவாங்குரியா?" என கேட்க கோபமுற்ற சாந்தியின் கணவன் வேவியின்ட தம்பிக்கு அடிக்க எதிரில் நின்றவர்கள் விலக்குப் பிடித்தார்கள் .

ஊரெல்லாம் சாந்திட கணவணை மாமா பயல் என நக்கலடிக்க அவமானத்தாலே அவன் தூக்குப்போட்டு செத்தான்.

சுதன்ர போண பறிச்சு உடைச்சு வீட்டுக்குள்ள பூட்டி ஒருகிழமை வைக்கவும்

"போணைத்தாடா போணைத்தாடா"

என கத்திக்கத்தி சாப்பிடாமல் கிடந்து முழு பைத்தியமாகி இன்று மனநல காப்பகத்திலிருக்கிறான்.

கொழுப்பெடுத்து அலைந்த சாந்தியோ அன்றாட சாப்பாட்டுக்கு வழியின்றி விபசாரத்தை முழு நேர தொழிலாக்கி ஊரவர்களால் அடித்து விரட்டப்பட்டாள்.

வேவியிட குடும்பமோ தரங்கெட்ட பைத்தியத்தால வேதனையில் அல்லாடுகிறார்கள்.

இப்படி குடும்ப அமைப்புச்சிதையவும் புத்திக்கூர்மையற்ற பிள்ளைகள் உருவாகவும் போதையும் காமமும் போணும் பிரதான காரணியாகி தினமும் தூக்கில தொங்குகின்றன.

யாரும் திருந்து வதாயுமில்லை உணருவதாயுமில்லை தொடரூந்தாக அவலங்கள் மட்டும் தொடருகின்றன.

பார்வையாளராய் இருக்கும் நாங்கள் பரிதாபப்பட்டுக்கொண்டும் ஏக்கத்துடனும் காலத்தை கழிக்கின்றோம். என சொல்லி சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் கதையை முடிக்க அந்த இடமே நிசப்தமாகியது.

அமெரிக்கா

காசாவை

# ‘கைப்பற்றுவோம்’

காசா பகுதியை அமெரிக்கா கைப்பற்றிக்கொள்ளும் என்று, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், கையகப்படுத்தும் காசா பகுதியில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவில், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு சந்தித்துப் பேசியுள்ளனர். இந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு ட்ரம்ப் இந்த கருத்தை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்து பேசிய ட்ரம்ப், “காசா பகுதியை அமெரிக்கா எடுத்துக் கொண்டு, அங்கு ஒரு வேலையைச் செய்யவுள்ளது. நாங்கள் அதற்கு உரிமம் கொள்வோம்.

அங்குள்ள வெடிக்காத வெடி குண்டுகளைப் பாதுகாப்பாக அகற்றுவோம். நலப்பரப்பை சீர்படுத்துவோம்.

இடிந்துபோன கட்டிடங்களை அகற்றுவோம். பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுவந்து, எண்ணற்ற வேலைவாய்ப்பை உருவாக்குவோம். அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுப்போம்” என்று கூறியுள்ளார்.

மேலும், போரால் பாதிக்கப்பட்ட காசாவில் இருந்து பாலஸ்தீனியர்கள் வெளியேறி எகிப்து அல்லது ஜோர்டான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்றும் ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.



சீனா

தென்சீனக் கடல் பகுதியில்

## மீண்டும் பயிற்சி ஆரம்பம்

தென்சீனக் கடல் பகுதியில், பிலிப்பைன்ஸுடன் இணைந்து அமெரிக்கா கூட்டுப் போர் பயிற்சியை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தென்சீனக் கடல் பகுதி முழுமைக்கும் சீனா உரிமை கொண்டாடுகிறது.

அதேசமயம் பிலிப்பைன்ஸ், மலேசியா, தைவான் உள்ளிட்ட நாடுகளும் அந்த பகுதிகளுக்கு உரிமை கோருகின்றன. எனவே அந்த நாடுகளுக்கும், சீனாவுக்கும் இடையே அவ்வப்போது அங்கு மோதல் ஏற்படுகிறது. குறிப்பாக அங்குச் செல்லும் பிலிப்பைன்ஸ் மீன்பிடி படகுகள் மீது சீன கடற்படையினர் அவ்வப்போது தாக்குதல் நடத்துகின்றனர்.

இந்த விவகாரத்தில் பிலிப்பைன்ஸுக்கு ஆதரவாக அமெரிக்காவும் களமிறங்கியது.

பாடசாலையில் துப்பாக்கி சூடு:

## 10 பேர் பலி



ஸ்வீடன்

ஸ்வீடனில் பாடசாலையொன்றில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் இருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஒரிபுரொ நகரில் மேல்நிலை பாடசாலை உள்ளது. இந்த பாடசாலையில் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்நிலையில், இந்த பாடசாலையில் செவ்வாய்க்கிழமை (4) மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதித்தனர். துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் தன்னை தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய பிரதேசம்

## யாசகம் போட்டவருக்கு சிக்கல்

மத்திய பிரதேசத்தில் யாசகம் எடுப்பதும், யாசகம் கொடுப்பதும் சட்டப்பூர்வமாகத் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அங்கு யாசகர் ஒருவருக்கு யாசகம் போட்ட நபரொருவருக்கு எதிராக பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்தூர் நகரில் உள்ள கோவில் முன்பு யாசகர் ஒருவர் யாசகம் எடுத்துக்கொண்டிருந்தார். அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர், யாசகருக்கு 10 ரூபாய் யாசகம் போட்டுள்ளார்.

இதை அறிந்த யாசக ஒழிப்பு குழு, குறித்த நபருக்கு எதிராக யாசகம் தடுப்பு பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்தது.



யாசகம் போட்ட நபர் கைது செய்யப்பட்டால் அவருக்கு இந்த சட்டப்பிரிவின் கீழ் ஒரு ஆண்டு வரை சிறைத் தண்டனை அல்லது ரூ.5,000 அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படலாம்.

ஏற்கெனவே கடந்த ஜனவரி 23ஆம் திகதி, காண்ட்வா கோவில் பகுதியில், நபர் ஒருவர் யாசகம் போட்டதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

“இந்தூரை யாசகர்கள் இல்லாத முதல் இந்திய நகரமாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த 6 மாதத்தில் 600 யாசகர்கள் அடையாளம் காணப்பட்டுப் பாதுகாப்பு இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மறுவாழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

“அதேபோல 100 சிறுவர்களும் மீட்கப்பட்டுள்ளனர். அதேபோல், யாசகம் எடுப்பவர்கள் பற்றி தகவல் தருபவர்களுக்கு ரூ.1,000 பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது” என்று, யாசகம் ஒழிப்பு குழு அதிகாரி ஒருவர் கூறினார்.

சவூதி/இந்தியா

## சவூதியில் இந்திய தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

சவூதி அரேபியாவில் பணியாற்றும் இந்திய தொழிலாளர்களின் எண்ணிக்கை கடந்த நிதியாண்டில் (2023-24) இரண்டு இலட்சமாக உயர்ந்துள்ளது.


சவூதி அரேபியாவில் கட்டுமானம், உள்கட்டமைப்பு, சேவைகள் போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியால் பதிவு செய்யப்பட்ட இந்திய நிறுவனங்களின் எண்ணிக்கை 2023-2024இல் 3,000ஆக உயர்ந்துள்ளது. அதேவேளை, அங்கு பணியாற்றும் இந்தியத் தொழிலாளர் எண்ணிக்கை 2 இலட்சம் அதிகரித்து, 26.5 இலட்சமாக உயர்ந்துள்ளது.

இது, முந்தைய நிதியாண்டை விட 10 சதவீத உயர்வு ஆகும். இதுபோல் நடப்பு நிதியாண்டிலும் (2024-25) இந்தியத் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கும் என அதிகாரிகள் நம்புகின்றனர்.

இதுகுறித்து சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் உள்ள இந்தியத் தூதர் சுகல் அஜாஸ் கான் கூறுகையில், “சவூதி அரேபியாவில் உள்ள இந்தியச் சமூகத்தினர் இரு நாடுகளுக்கும் இடையே உயிரோட்டமுள்ள பாலமாக விளங்குகின்றனர். சவூதி அரேபியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியர்களின் பங்களிப்பு பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது” என்றார்.

2030ஆம் ஆண்டு தொலைநோக்கு திட்டத்தின் கீழ் எண்ணெய் அல்லாத வருவாயை அதிகரிப்பதை நோக்கி சவூதி அரசு நகர்ந்து வருகிறது. இதனால் உற்பத்தி, சுற்றுலா, பசுமை எரிசக்தி போன்ற துறைகளில் வெளிநாட்டினர் உட்பட அதிக நிபுணர்களை பணியமர்த்துவதில் கவனம் செலுத்தி வருகிறது.

இந்நிலையில் சவூதி அரேபிய அரசின் தகாமோல் ஹோல்டிங் என்ற மனித வள நிறுவனத்துடன் இந்திய அரசு திறன் சரிபார்ப்பு ஒப்பந்தம் செய்துகொண்டது. இதன்படி கடந்த 2022ஆம் ஆண்டு முதல், இந்தியாவின் தேசிய திறன்



மேம்பாட்டுக் கழகம் மூலம் இந்தியத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்து சான்றிதழ் வழங்கி வருகிறது. இதனால் திறமையான ஆட்களை சவூதி அதிகாரிகள் பணியில் அமர்த்தி வருகின்றனர். மேலும் பணியமர்த்தும் செயல்முறையை நெறிப்படுத்வதிலும் பணியாளர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

கடந்த 2019இல் சவூதி அரேபியாவில் பதிவு செய்யப்பட்ட இந்திய நிறுவனங்களின் எண்ணிக்கை 400ஆக இருந்தது. இது 2023ஆம் ஆண்டு ஆகஸ்டில் 3,000ஆக அதிகரித்து மொத்த முதலீடு 3 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

எட்டு அணிகள் மோதும் சாம்பியன்ஸ் கோப்பை:

# முக்கிய வீரர்கள் இல்லாததால் ஆஸி.க்கு பெரும் சிக்கல்







சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) நடத்தும் சாம்பியன்ஸ் கோப்பை 2025 கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்த தொடரில் மொத்தம் எட்டு அணிகள் மோதுகின்றன. பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெறும் இந்த தொடருக்காக ஒவ்வொரு அணியும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், சாம்பியன்ஸ் கோப்பை 2025 தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் கேப்டன் பேட் கம்மின்ஸ் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் ஹேசில்வுட் இடம்பெறுவது சந்தேகம் என ஆஸ்திரேலிய அணி தலைமை பயிற்சியாளர் ஆண்ட்ரூ மெக்டொனால்டு தெரிவித்துள்ளார்.

காயத்தால் அவதியுற்ற நிலையில், இருவரும் சாம்பியன்ஸ் கோப்பை தொடரில் விளையாடுவது கேள்விக்குறியாகி இருக்கிறது.

இரண்டாவது குழந்தை பிறந்துள்ளதை அடுத்து இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து பேட் கம்மின்ஸ் சமீபத்தில் விலகியிருந்தார்.

இதுதவிர பேட் கம்மின்ஸ் இந்தியாவுக்கு எதிரான பார்டர் கவாஸ்கர் கோப்பை தொடரின் போது காயமுற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேகப்பந்து வீச்சாளரான ஜோஷ் ஹேசில்வுட் காயத்தில் இருந்து மீண்டு வருகிறார். இவரும் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஆஸ்திரேலியா - இந்தியா அணிகள் இடையிலான டெஸ்ட் தொடரில் விளையாடிய போது காயம் ஏற்பட்டதால் பாதியில் விலகினார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான

## ஒருநாள் தொடர்: பும்ரா விலகல்?

இந்தியா-இங்கிலாந்து இடையிலான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 4-1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. இதையடுத்து, இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் இன்று 6ஆம் திகதி தொடங்குகிறது. ஒருநாள் போட்டிகள் முறையே நாக்பூர், கட்டாக், அகமதாபாத்தில் நடைபெற உள்ளன.

இந்த நிலையில், இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து பும்ரா விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னியில் நடந்த கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவுக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் 5 வாரங்கள் ஓய்வு எடுக்க டாக்டர்கள் அறிவுறுத்தி இருந்தனர்.இதற்கிடையே இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான இந்திய அணியில் பும்ரா இடம் பெற்றிருந்தார். முதல் இரு ஆட்டங்களில் அவர் ஆடமாட்டார். உடல்தகுதியை பொறுத்து 3-வது ஒரு நாள் போட்டியில் விளையாடுவது குறித்து முடிவு செய்யப்படும் என்று இந்திய தேர்வு குழு தலைவர் அஜித் அகர்கர் தெரிவித்திருந்தார்.



இந்த நிலையில், வருண் சக்ரவர்த்தி சேர்ப்புக்கு பிறகு இந்திய கிரிக்கெட் வாரியம் நேற்று வெளியிட்ட அணிப்பட்டியலில் பும்ரா பெயர் இடம் பெறவில்லை. இதன் மூலம் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து பும்ரா விலகியது உறுதியாகியுள்ளது.




## ஓய்வு பெறுகிறார் திமுத்

இலங்கை - ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான கடைசி மற்றும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை (6) காலே நகரில் தொடங்குகிறது. இந்த போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக இலங்கை அணியின் முன்னாள் கேப்டன் திமுத் கருணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்டம் அவருக்கு 100ஆவது டெஸ்ட் போட்டி ஆகும். 36 வயதான கருணரத்னே 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 16 சதங்கள், 34 அரை சதங்களுடன் 7,172 ஓட்டங்களை குவித்துள்ளார். ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 50 ஆட்டங்களில் பங்கேற்று ஒரு சதம், 11 அரை சதங்களுடன் 1,316 ஓட்டங்களை சேர்த்துள்ளார்.

கருணரத்ன கூறும்போது, “ஒரு டெஸ்ட் வீரர் வருடத்தில் 4 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடி ஃபார்மை தக்க வைத்துக் கொள்வது கடினம். உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் அறிமுகப்படுத்தப்பட்ட கடந்த இரண்டு-மூன்று ஆண்டுகளில், நாங்கள் மிகக் குறைவான இருதரப்பு தொடர்களிலேயே விளையாடினோம். எனது தற்போதைய பார்மும் ஓய்வு பெற மற்றொரு காரணம். உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் சுழற்சியின் முடிவில் எனது 100 டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுவது சரியான நேரம் என்று நினைத்தேன் என்றார்.

டி20 கிரிக்கெட்டில்

## புது மைல்கல் எட்டிய ரஷித்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர் ரஷித் கான் டி20 போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை படைத்து அசத்தியுள்ளார். தென் ஆப்பிரிக்கா டி20 கிரிக்கெட் தொடரான எஸ்.ஏ.20 தொடரில் விளையாடி வரும் ரஷித் கான் எம்.ஐ. கேப் டவுன் அணிக்காக விளையாடி வருகிறார்.

அந்த வகையில், செவ்வாய்க்கிழமை (4) நடந்த அரையிறுதி போட்டியில் ரஷித் கான் எம்.ஐ. கேப் டவுன் அணிக்காக 2 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இதன் மூலம் அவர் டி20 கிரிக்கெட்டில் 633 விக்கெட்டுகளை எட்டியுள்ளார்.

இது டி20 கிரிக்கெட்டில் ஒருவர் எடுத்த அதிகபட்ச விக்கெட்டுகளாக மாறியது. முன்னதாக டி20 கிரிக்கெட்டில் 631 விக்கெட்டுகளை வீழ்த்தி டுவேன் பிராவோ அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய வீரராக இருந்து வந்துள்ளார்.

26 வயதான ரஷித் கான் சர்வதேச டி20 போட்டிகளில் 161 விக்கெட்டுகளையும், உள்ளூர் மற்றும் பிரான்சைஸ் கிரிக்கெட் தொடர்களில் 472 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். பிரான்சைஸ் கிரிக்கெட்டை பொருத்தவரை ரஷித் கான் சன்ரைசர்ஸ் ஐதராபாத், குஜராத் டைட்டன்ஸ், அடிலெய்டு ஸ்டிரைக்கர்கஸ், சசெக்ஸ் ஷார்க்ஸ் மற்றும் டிரெண்ட் ராக்கெட்ஸ் அணிகளுக்காக விளையாடி உள்ளார்.

461 போட்டிகளில் இந்த மைல்கல்லை எட்டிய ரஷித் கானின் சராசரி 18.08 ஆகும். டுவைன் பிராவோ 582 போட்டிகளில் விளையாடி 631 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இவரது சராசரி 24.40 ஆகும். ரஷித் கான், டுவைன் பிராவோ வரிசையில் சுனில் நரைன் (574 விக்கெட்டுகள்), இம்ரான் தாஹிர் (531 விக்கெட்டுகள்) மற்றும் ஷகிப் அல் ஹாசன் (492 விக்கெட்டுகள்) என அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.




“ அரையிறுதி போட்டியில் ரஷித் கான் எம்.ஐ. கேப் டவுன் அணிக்காக 2 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்

“ 461 போட்டிகளில் இந்த மைல்கல்லை எட்டிய ரஷித் கானின் சராசரி 18.08 ஆகும்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 06 பெப்ரவரி 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.